# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

## C.C-67-2023

| LW.8 P.W.5 | | |
|---|---|---|
| Name: | தமிழ்மணி | Caste: |
| Father's Name: | கோதண்டபாணி | Calling: |
| Village: | | Religion: |
| Taluk: | | Age:64/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.08.2026

(எதிரி ஆஜர்.)

**முன் விசாரணை:**

நான் தமிழ்நாடு காவல் துறையில் பணியாற்றி பணி ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 2022–ஆம் வருடம் கரியாப்பட்டினம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது, அதே காவல் நிலையத்தில் பணியிலிருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் ஆனந்த் என்பவரை எனக்கு நன்கு தெரியும். அவரது கையொப்பம் மற்றும் கையெழுத்து எனக்கு தெரியும். வழக்கின் விரைவு விசாரணை, கால தாமதம் மற்றும் நீதியின் நலலை கருத்தில் கொண்டு, அவருக்கு பதிலாக நான் சாட்சியம் அளிக்கிறேன். அவர் கடந்த 23.11.2022 அன்று காலை 10.00 மணிக்கு நிலைய பொறுப்பிலிருந்தபோது, வேதாரண்யம் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த வாதி பொன்னழகன் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று வந்து நிலைய குற்ற எண் 187/2022 ச.பி. 294(பி) ,324, 506(2) இ.த.ச படி வழக்கு பதிவு செய்துள்ளார். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.4–ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் அன்றைய தினமே 15.00 மணிக்கு வாதிக்கு சொந்தமான பவித்ரா ஹோட்டல் அருகே சென்று இடம் சென்று சாட்சிகள் ராஜா மற்றும் ரெத்தினசாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு **பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அவை முறையே அ.த.சா.ஆ.5 மற்றும் 6–ஆக**

**குறியீடு செய்யப்படுகிறது**. பின் சாட்சிகள் பொன்னழகன், கனி, பாஸ்கர், மற்றும் ஆகியோரையும் மற்றும் மகஜர் சாட்சிகளையும் விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். பின் சம்பவம் நடந்தது உண்மையென தெரியவர எதிரி மோகனசுந்தரத்தை அன்றைய தினமே 15.30 மணிக்கு செண்பகராயநல்லூர் வளைவு அருகில் குற்ற காரணம் கூறி கைது செய்து நிலைய பாரா வசம் ஒப்படைத்து, நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். அவருடைய விசாரணையை முடித்து, எனது பார்வைக்கு கோப்புகளை வைத்தார்.

பின்னர் நான் 13.02.2023 அன்று வழக்கை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அ.சா.1–க்கு சிகிச்சையளித்த வேதாரண்யம் அரசு மருத்துவமனை மருத்துவர் சந்திரமௌலி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அ.சா.1–க்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என காயச்சான்று பெற்று தாக்கல் செய்தேன். இவ்வழக்கின் சாட்சிகளை விசாரித்தபோது, சிறப்பு உதவி ஆய்வாளரிடம் கூறியதையே என்னிடமும் சாட்சிகள் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. அன்றைய தினமே புலன் விசாரணையின் முடித்து எதிரி மீது ச.பி. 294(பி), 324, 506(2) இ.த.ச–படி குற்றபத்திரிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் இறுதி அறிக்கை தாக்கல் செய்யும் முன்பாக இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பட்டியல் சாட்சி.7–ஐ விசாரணை செய்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரி. வழக்கு கோப்புகள் எதற்காக மேல்விசாரணைக்கு என்னிடம் வைக்கப்பட்டது என்ற விவரம் வழக்கில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரி. சம்பவ இடத்தை நான் பார்க்கவில்லை. சம்பவ இடத்தில் உள்ள கடைப்பகுதியில் உள்ள அடுப்பானது சிமெண்ட் கட்டுமானத்தில் உள்ளதா, மண் கட்டுமானத்தில் உள்ளதா அல்லது வேறு மூலப்பொருளால் ஆனதா என்ற விவரம் இல்லை என்றால் சரி. தரை மட்டத்திலிருந்து அடுப்பு எவ்வளவு உயரத்தில் இருந்தது என்ற விவரமும் இல்லை.

வடை சட்டியின் எடை, விஸ்தீரணம் ஆகியவை குறிப்பிடப்படவில்லை என்றால் சரி. சம்பவத்தின்போது எத்தனை லிட்டர் எண்ணெய் இருந்தது என்ற விவரமும்

வழக்கில் இல்லை. எதிரி எந்த திசையில் நின்றார், அ.சா.1 எந்த திசையில் நின்றார் என்ற விவரமும் குறிப்பிடப்படவில்லை. அ.சா.1 தான் எண்ணெய் சட்டிக்கு முன்பு இருந்து எதிர்புறம் இருந்த எதிரியின் முகத்தை கையால் தள்ளினார் என்றும், அதனால் எண்ணெய் சட்டி அ.சா.1–னின் உடம்பில் சாய்ந்து அ.சா.1–க்கு காயம் ஏற்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. எதிரி சூடான எண்ணெய் சட்டியை தூக்கியிருக்கும்போது அவருக்கும் காயம் ஏற்படும் என்றும், அவரை மருத்துவ பரிசோதனை செய்யவில்லை என்றால் சரி.

எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தும் போது எதிரியின் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தும்போது, அவருக்கு கையில் காயங்கள் எதுவும் இருந்ததாக மருத்துவர் குறிப்பில் காணப்படவில்லை என்றால் சரி. உண்மை விவரங்கள் தெரிய வரும் என்பதால் தான், பட்டியல் சாட்சி.7–ஐ விசாரித்து எவ்வித வாக்குமூலமும் பெறவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் உண்மையில் நடைபெறாத காரணத்தினால் தான் பட்டியல் சாட்சி.7 குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யாமல், வழக்கு கோப்பை என் வசம் ஒப்படைத்தார் என்றால் சரியல்ல. பட்டியல் சாட்சி.7 நிலையத்தில் வைத்து தயார் செய்த ஆவணங்களின் அடிப்படையில் தான் நான் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தான் நான் சம்பவ இடம் சென்று விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. பொய்யாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்து, பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றும், சம்பவ தேதியில், எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், எதிரிக்கும் சம்பவத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..G. Sudha., 11.08.2026)**
**Dm-cum-Jm, Vedaranyam.**